நாணயவியல்

ஆய்வரங்கம்

சனவரி 30, 1989



அரசு அருங்காட்சியகம்,
ஈரோடு-1.

நாட்டு நலப்பணித் திட்டம் (1 & 3 அணிகள்)
சிக்கைய நாயக்கர் கல்லூரி,
ஈரோடு-4.

நன்றி : இண்டாக், பெ

நாணயவியல்

ஆய்வரங்கக் கட்டுரைகளின் சுருக்கம்.

30.1.1989.

தொகுப்பாளர்கள்

பேராசிரியர் க.ஆ.திருஞானசம்பந்தம்
தமிழ்த்துறைத் தலைவர்,
சிக்கைய நாயக்கர் கல்லூரி,
ஈரோடு 4.

வே. ஜெயராஜ்
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
ஈரோடு.1.

அருங்காட்சியகத் துறை,
அரசு அருங்காட்சியகம்,
நகராட்சி அலுவலக வளாகம், ஈரோடு 1.
1989.

நாணயவியல்

ஆய்வரங்கக் கட்டுரைகளின் சுருக்கம்.

30.1.1989.

தொகுப்பாளர்கள்

பேராசிரியர் க.ஆ. திருஞானசம்பந்தம்
தமிழ்த்துறைத் தலைவர்,
சிக்கைய நாயக்கர் கல்லூரி,
ஈரோடு 4.

வே. ஜெயராஜ்
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
ஈரோடு. 1.

அருங்காட்சியகத் துறை,
அரசு அருங்காட்சியகம்,
நகராட்சி அலுவலக வளாகம், ஈரோடு 1.
1989.

முன்னுரை

வரலாற்றின் மைல்கல் நாணயவியலாகும்!

இந் நாணயவியல் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் தொடங்கி வரலாற்று அறிவியலாக வளர்ந்து வருகிறது. பெருமளவில் காசுகள் அருங்காட்சியகங்களாலும், காசியல் ஆர்வலர்களாலும் சேகரிக்கப்பட்டுப் புதிய செய்திகள் வரலாற்றைப் புதுப்பிக்கின்றன. பொழுது போக்கிற்காகக் காசுகளைச் சேகரித்த ஆர்வலர்கள் பலர் இம்மாவட்டத்தில் உள்ளனர். அவர்களைக் கூட்டிச் சேர்த்துக் காசியியல் நுணுக்கங்களைப் பலருக்கும் வெளிப்படுத்தும் வண்ணம் ஓர் ஆய்வரங்கமும் மக்கள் அனைவரும் கண்டுகளிக்க ஒரு கண்காட்சியும் அமைக்க ஊக்கமூட்டிய ஆர்வலர்களின் முயற்சியே இந்த ஆய்வரங்கமும் கண்காட்சியுமாகும். சிக்கைய நாயக்கர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட 1, 3 அணிகள் இம் முயற்சியில் ஈரோடு அரசு அருங்காட்சியகத்துடன் இணைத்துக் கொண்டது வளர்ச்சியின் அறிகுறியாகும்.

அருங்காட்சியகத்திற்கும் மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு தேவை என்பதை வற்புறுத்தி கண்காட்சிகள், ஆய்வரங்கங்கள் நடத்த ஊக்குவித்து கலந்து கொண்டு சிறப்பிக்கும் அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு. என். ஹரிநாராயணா அவர்களுக்கு நன்றி. பெரியார் மாவட்ட ஆட்சியர் திரு. வி. கே. சுப்புராஜ். இ.ஆ.ப. அவர்கள் தொடக்கத்திலிருந்தே ஆர்வங்காட்டி பெரியார் மாவட்ட அரசு அருங்காட்சியக விரிவுக்கும் வளர்ச்சிக்கும் பேராதரவு காட்டி விழாவில் கலந்து கொண்டமைக்கு நன்றி.

பெரியார் மாவட்டம் மற்றும் அண்டைய மாவட்டங்களிலிருந்து வந்து பங்கு கொண்ட காசியலாரின் ஆர்வம் இத்துறைக்கு ஊக்கமளிக்கிறது. ஆய்வாளர்கள், விருந்தினர்கள், ஒத்துழைப்புநல்கிய அனைவருக்கும் ஆய்வரங்கமும் கண்காட்சியும் நடைபெற ஒத்துழைப்பு கொடுத்த அனைவருக்கும், நன்றி.

அன்புடன்,

தொகுப்பாளர்கள்.

30.1.1989.

நாணயவியல்

கே.ஜே. ராஜு, கோதகிரி.

நாணயவியல் என்பது நாணயங்களைக் கொண்டு வரலாற்றினை ஆராயும் அறிவியல் துறையாகும். இந்த இயல் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டது.

நாணயங்களின் தோற்றம்:

முற்காலத்தில் நடந்த பண்டமாற்று முறையை நீக்க நாணயங்கள் உலோகங்களில் வெளியிடப்பட்டன. கி.மு. 5ம் நூற்றாண்டு வரை வெள்ளி, தங்கக் கட்டிகளே நாணயங்களாக வழங்கப்பட்டன. பின் தேவையான எடையுள்ள துண்டுகள் வெட்டி வெளியிடப்பட்டன. கி.மு. 680ல் ஒரு வியாபாரி சம எடையுள்ள ஒரே மாதிரியான நாணயங்களை வெளியிட்டார். அதுவே உலகின் முதல் நாணயமாகும். மகா அலெக்சாண்டர்தான் நாணயத்தில் தம் உருவத்தைப் பொறித்த முதல் அரசராவார்.

நாணயங்கள் தயாரித்தல்:

முன்பு நாணயங்கள் வார்த்தல், அடித்தல் என்ற இரு முறைகளில் தயாரிக்கப்பட்டன. முதல் முதலாக இத்தாலியில்தான் நாணயங்கள் இயந்திரங்களால் தயாரிக்கப்பட்டன.

இந்தியாவில் நாணயவியல்:

இந்தியாவில் கிடைக்கும் நாணயங்களில் பழமையானது கி.மு. 8ம் நூற்றாண்டில் புழக்கத்திலிருந்த ""புராணா"" ஆகும். இவை குறியீட்டு நாணயங்கள் (Punch marked coins) - என்று அழைக்கப்படுகின்றன. கி.மு. 400 முதல் கி.மு. 100 வரை இந்திய அரசர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் புழக்கத்தில் இருந்தன. குப்தர்களின் காலம் நாணயக்கலை உயர்ந்த நிலையை அடைந்தது. சாணக்கியர் சிறந்த பொன் நாணயங்கள் உட்பட பலவித நாணயங்களை வெளியிட்டனர். சாதவாகனர் வெளியிட்டவை பெரும்பாலும் ஈயத்தாலானவை. உறர்ச வர்த்தனர் வெள்ளி நாணயம் வெளியிட்டார். இராஜபுத்திரர் தங்கம், செம்பு, அல்லது செம்பு-வெள்ளி நாணயங்களை வெளியிட்டனர்.

முஸ்லீம் நாணயங்கள்:

முஸ்லீம்கள் நாணயங்களில் பெரும்பாலும் அரசருடைய பெயர், விருதுகள், உறிஜிரா ஆண்டு ஆகியவை பாரசீக எழுத்தில் இரு பக்கத்திலும் காணப்படும். டெல்லி சுல்தான் வெளியிட்ட இந்திய நாணயத்தில் தான் முதன் முதலாக நாணயம் அடித்த இடத்தின் பெயர் பொறிக்கப் பட்டுள்ளது.

ஷெர்ஷா தான் முதன் முதலாக 'ரூபாய்' நாணயத்தை வெளியிட்டார். திப்பு சுல்தான் மொகரா (தங்கம்) சீசம் ரூபாய்கள் (வெள்ளி) மற்றும் காசுகள் (செம்பு) வெளியிட்டார்.

இந்திய ஐரோப்பிய நாணயங்கள்:

வாணிபத்திற்காக வந்த ஐரோப்பியர்கள் பல கம்பெனிகளை நிறுவி பொன், வெள்ளி, செம்பு, ஈயம் நாணயங்களை வெளியிட்டனர். போர்ச்சுகீசியர்கள் கள்ளிக்கோட்டை, கோவா, பஸீன், டையு, டாமன் போன்ற இடங்களிலிருந்து நாணயங்களை வெளியிட்டனர். டேனியர்கள் தரங்கம்பாடியிலிருந்து பொன், வெள்ளி

நாணயங்களை வெளியிட்டனர். டச்சுக்காரர்கள் ஸ்டுயிவர் என்ற நாணயங்களை வெளியிட்டனர். பிரெஞ்சுக்காரர்கள் புதுச்சேரியிலிருந்து 1700ம் ஆண்டு வெள்ளி நாணயங்களையும் 1736-1939 வரை "ஆர்க்காடு ரூபாய்" களையும் வெளியிட்டனர்.

இந்திய பிரிட்டிஷ் நாணயங்கள்:

இந்தியாவில் வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேயர் உபயோகத்திற்கென இங்கிலாந்திலிருந்து நாணயங்கள் அச்சிடப் பெற்று வழங்கப்பட்டன. நட்சத்திர பகோடாக்கள், பகோடாக்கள், பணம், ரூபாய், பூவராகன், ஆர்க்காடு ரூபா ஆகிய நாணயங்களை அச்சிட்டு வெளியிட்டனர். முகலாய சாம்ராஜ்யம் சீரழிந்து பிரிட்டிஷ் அரசாட்சி ஓங்கியதும் வெள்ளி ரூபாயை அடிப்படையாகக் கொண்டு இந்திய நாணயம் நிர்ணயிக்கப்படும் வரை இவ்வித நாணயங்கள் வழக்கிலிருந்தன..

தமிழ் நாட்டில் நாணயவியல்:

பல்லவர் காலத்தில் அச்சடிக்கப்பட்ட நாணயங்களில் பல்வேறு சின்னங்கள் காணப்படுகின்றன. கீழைச்சாளுக்கியருடைய நாணயத்தில் அவர்களது சின்னமான பன்றியும், அதைச் சுற்றி அரசனுடைய பெயரும் காணப்படுகின்றன. சோழர்கால, நாணயங்களில் அவர்களுடைய சின்னமாகிய புலி பலவித உருவங்களில் காணப்படும். ராஜராஜன், ராஜேந்திரன், குலோத்துங்க சோழர்களின் நாணயங்களில் அவர்களின் உருவங்கள் அல்லது பெயர்கள் காணப்படுகின்றன.

பாண்டியர் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய நாணயங்களை மீன் சின்னத்துடன் வெளியிட்டனர். சேரர்கள் பல உருவங்களுடனும் வாசகங்களுடனும் நாணயங்களை வெளியிட்டனர். விஜயநகர நாணயங்கள் பல உருவப்பொறிப்புகளுடன் வெளியிடப்பட்டன.

தற்கால நாணயங்கள்:

பழைய நாணயங்களுடன் ஒப்பிடுகையில் தற்கால நாணயங்களின் உலோக மதிப்பு மிகக்குறைவு எனலாம். மறைந்த தலைவர்கள், சிறப்பு நிகழ்ச்சிகள்; போன்றவற்றைப் பொறித்த சிறப்பு நாணயங்கள் வெளியிடப்படுவது இன்றைய நிலை.

முடிவுரை:-

நாணயங்கள் சொல்லிய வரலாற்றிலும் சொல்லப் போகும் வரலாற்றிலும் எந்த முரண்பாடுகள் இருந்தாலும் நாணயங்கள் சேகரித்தல் ஒரு சிறந்த பொழுதுபோக்கு என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க முடியாது.

பூந்துறைக் காசுகள்

- பேராசிரியர் கா. அரங்கசாமி, கோபி.

முன்னுரை: பொன்-காசு-துளைப்பொன் - நாணயம் என்பன போன்ற பல சொற்கள் தமிழில் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே காசுகள் எனப்படும் நாணயத்தைக் குறித்தன. 'நாணயம்' என்ற சொல்லும் 'காசு' என்ற சொல்லும் தமிழினத்தின் பண்பாட்டு - நாகரிக வரலாற்றைக் காட்டுவன. அத்தகு சிறப்பு மிக்க நாணயங்கள் கி.மு. எட்டாம் நூற்றாண்டு முதல் வரலாற்றில்இடம் பெற்றிருந்தமையை அறிஞர்கள் சுட்டுவர்[1].
பெருமைமிக்க கொங்கு நாட்டு வரலாற்றுப் புகழ் மிக்க பூந்துறை நாட்டின் முதன்மை நகராம் பூந்துறையில் கிடைத்த காசுகளைப் பற்றிச் சுருங்கச் சொல்வதே இக்கட்டுரையின் கருத்தாம்.

நாணயம் - காசு: நாவின்-சொல்லின்-நயத்தை- நீதியைக் கட்டிக் காப்பது நாணயம். பண்டமாற்றின் மாற்றாக வந்த நாணயம் - சொன்ன விலைக்கு - ஒப்பாகச் சொல்லின் நீதியைக் காக்கும் வகையில் அமைந்தமையால் நாணயம் எனப்பட்டது. எனவே இச்சொல் வணிக நீதியை - அறத்தை - நடுவுநிலைப் பண்பாட்டைக் காட்டி நிற்கும். அவ்வாறே 'காசு' என்பது வட்ட வடிவமான பொன் அணியைக் குறித்துப் பின் வட்ட வடிவில் வழக்கில் வந்த நாணயமான காசுகளைக் குறித்தது. இன்றும் காசுமலை என்னும் வழக்குண்மை காண்க. சங்க இலக்கியங்களில் - பொன் - பொற்காசு - காசு என்னும் சொற்கள் பயில வழங்கும். குறுந்தொகை 67 'ஆம் பாடலில்,

> "கிள்ளை - வள்ளவாய்க் கொண்ட வேப்ப ஒண்பழம்
> புதுநாண் நுழைப்பான் நுதிமாண் வார் உகிர்ப்
> பொலங்கல ஒரு காசு ஏய்க்கும்" (2)

கிளியின் இரு அலகுகள் பொற்பணி செய்வானின் இரு உகிர்க்கும், வேப்பம்பழம் பொற்காசின் நிறத்துக்கும் ஒப்புமையாயின. அத்துடன் "நுதிமாண் வார் உகிர்ப் பொலங்கல ஒரு காசு" என்னும் தொடரால் காசுகள் உகிர் போலத் தட்டையாகவும் ஓரளவு வட்டமாகவும் அமைந்த பாங்கும் புலப்படும். இவ்வாறு பொற்காசின் தோற்றம் - அமைப்பு - முதலன பற்றிப் பல சங்கப் பாடல்கள் பரக்கப் பேசுகின்றன. காசுகள் பழக்கத்தில் வந்த பின்னர் குற்றங்கள் பெருகியதால் 'காசு' என்ற சொல் குற்றம் - குறை என்ற பொருளையும் பெற்றது. இவ்வண்ணம் பண்டமாற்று வணிகத்தை மாற்றி நாணயமாற்று வணிகமாக வளர்ந்து நா நயமற்றுப் போனதையும் பண்பாட்டின் வீழ்ச்சியையும் இச் சொல்வழி அறியலாம்.

நாணயவியலின் பயன்: நாணயங்கள் - வரலாறு - அரசியல் - பொருளியல் கால்கோட்பட்ட பண்பாடு நாகரிகம் - கலை வளர்ச்சி - வணிகவளம் - அரச மரபு - மக்கள் வாழ்வியல் நிலை அனைத்தும் காட்டும் என்பர்.[3] நாணயங்கள் வட்ட வடிவம் - சமத்தடிப்பு - ஒரே எடை கொண்டதாக அமையும்.[4] தொடக்கத்தில் நாணயங்களை வார்த்தனர் ரோமானியர் நாணயங்களை "ஆரியஸ்" என்பர் "ஆரியஸ்" என்றால் 'பொன்' என்று பொருள்படும்.[5] நமது இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் நாணயத்தைப் 'பொன்' என்றே கூறும்.[6] "பொன்னொடு வந்து கறியொடு பெயரும் யவனர்" என்னும் சங்கப்பாடல் அடி பொற்காசுகளின் எடைக்குத் தமிழ்நாட்டின் மிளகை யவனர் கொண்டனர் என்பதைக் காட்டும். தமிழர்க்குப் பொற்காலம் - இரும்பு செம்புக் காலத்துக்கும் முற்பட்டது. என்பதைக் கரும்பொன் என்னும் வழக்கே உணர்த்தும். பொன் என்ற தமிழ் சொற்கு அழகு - இரும்பு - இலக்குமி ஒரு நாணயம் - சூரியன் - பஞ்சலோகம்-பொலிவு-வியாழம் என்னும் பொருள்களைக் குறிப்பதால் அச்சொல்லின பயன்பாட்டை வரலாற்று நோக்கில் காணலாம்.[7] அவ்வாறே 'காசு' என்ற சொற்கும் காசுக்கட்டி - குற்றம் - கோழை - நாணயம் - பொன் - மாதரணி வடம்[8] போன்ற பொருள்களைக் குறிப்பதால் காசின் குறையும் நிறையும் பண்பாட்டு வண்ணத்தில் உணரலாம்.

பூந்துறைக் காசுகள்:

கொங்கு நாட்டின் முதன்மை நாடெனப் புகழ் பெற்ற பூந்துறைப் புட்பவன நாதர் கோவிலின் உள்ளே கிழக்கு நோக்கி அமைந்துள்ள காசு விசுவநாதர் விசாலாட்சி ஆலயத்தைப் புதுப்பிக்க எடுத்த போது இறை படிமத்துக் கீழே 56 காசுகள் - என்பான் மணிகள் - எந்திரத் தகடு இம் மூன்றும் இருந்தன. பூந்துறை நாட்டுக்கு நான்கு முதன்மை நகர்கள் பூந்துறை - வெள்ளோடு - நசையனூர் - எழுமாத்தூர் என்பன. இந் நான்கு நகர்க்கும் முறையே 10-8-6-4 உறுப்பினர்கள் எஞ்சிய 28 ஊர்கட்கும் 28 உறுப்பினர்கள். இவ்வாறு பூந்துறை நாட்டவைக்கு 56 உறுப்பினர்கள். இந்த வரலாற்றுச் செய்தியை உறுதிப் படுத்தும் வண்ணம் 56 காசுகள் இறைபடிமத்தின் அடியில் இருந்தன என்பது சிந்தனைக்குரியது. இக்காசுகளால் பூந்துறை நாட்டின் மக்களாட்சி மாண்பு வெளிப்படும். ஒவ்வொரு உறுப்பினரும் தத்தம் ஊர்ச் சார்பில் (குடும்ப சார்பில்) ஒவ்வொரு காசுகளை இட்டுள்ளனர் என்பதும் அனைவரும் ஒத்த நிலையில் மதிக்கப்பட்டனர் என்பதும் போதரும்.

காசுகளின் அமைப்பும் வரலாற்றுக் குறிப்பும்:

36 காசுகள் விசயநகர ஆட்சித் காலத்தன என்று கருதுமாறு உள்ளன. எழுத்துக்கள் முழுதும் அறியப்படா நிலையில் ஒரு காசு உள்ளது. மூன்று காசுகள் வரலாற்றில் சீரிடம் பெறத்தக்க தன்மையில் உள்ளன. அவற்றில் ஒரு பக்கம் தமிழி(தமிழ்பிராமி) எழுத்துக்கள் போன்ற எழுத்துக்கள் உள. அவ்வெழுத்துக்களில் 'அ' என்னும் எழுத்தைக் காணலாம். மற்றவற்றையும் நாணயவியல் அறிஞர்கள் நுனித்து ஆய்ந்து உண்மை காணல் நலம். மறு பக்கம் கோடுகள் புள்ளிகள் உள்ளன.

காசுகள் இருக்குமிடம்:

பூந்துறை நாட்டில் பலவாண்டுகட்கு முன்னரே முடவர்காப்பகம் ஏற்படுத்திப் புகழ் பெற்றபூந்துறை வாரணவாசிக் கவுண்டரின் மரபில் வந்த பூந்துறைக் காருத்துப்பாளையம்[9]. வாரணவாசிக் கவுண்டர் மகன் சுந்தரப்பக் கவுண்டர் தம் மகன் வாரணவாசிக் கவுண்டரிடம் இக் காசுகள் உள்ளன. (இக் கோயில் அவர்களின் முன்னோர்தம் முயற்சியால் உருவானது என்பர்) அவர் இன்றைய கண்காட்சியில் அக்காசுகளை வைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முடிவுரை:

பழந்தமிழினத்தின் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழும் கொடுமணத்தைக் கொண்டுள்ள கொங்கு நாட்டின் வரலாற்றினுக்கு ஒரு ஒளிச் சுடராக இப்பூந்துறைக் காசுகள் கிடைத்துள்ளன. நாணயவியல் அறிஞர்கள் மேலும் ஆய்ந்து நன்முடிவுகளைக் காண்பார்களாக.

குறிப்புக்கள்.

1. தமிழ்கலைக் களஞ்சியம் தொகுதி2 ப: 387
2. குறுந்தொகை ஈ 67
3. தமிழ்க் கலைக் களஞ்சியம் "
4. " " 388
5. " " 393
6. " " "
7. சதிரைவேற்பிள்ளை தமிழ்மொழி அகராதி ப: 1037
8. " " 424

9 பூந்துறை பண்ணைக் கிணறு செல்லும் பாதையில் பூந்துறையிலிருந்து 2. கி. மீட்டர் தொலைவில் உள்ள ஊர்.

<u>சீரியர் கால நாணயங்கள்</u>

ப. நேசையா,
பி. 25, பெரியார் நகர், ஈரோடு 1.

<u>முகவுரை</u> :- முற்காலத்தில் மக்கள் தங்களுக்கு வேண்டிய பண்டங்களைப் பண்ட மாற்று முறையில் பெற்றுவந்தனர். பண்டமாற்று முறையில் உள்ள கடினங்களை நீக்கும் பொருட்டு நாகரிகம் வளர்ந்த காலத்தில் பொன், வெள்ளி, செம்பு, நிக்கல் ஆகிய உலோகங்களால் செய்யப்பட்ட உலோகங்கள் புழக்கத்தில் வந்தன.

<u>நாட்டின் சிறப்பு</u> :- நாணயங்கள் [illegible] நா[illegible] வெளியிட்ட அரசர்கள், ஆட்சி, வெற்றி, பொருளாதாரம், சிறப்பு போன்றவை அறியலாகும். ஒரு நாட்டில் செல்லும் நாணயம் மாற்று அரசன் நாட்டில் செல்லாது. தங்க நாணயங்கள் வெளியிட்டஅரசர்கள் நாட்டில் செல்வச் செழிப்பும், அமைதியும், நீதியும் நிலவியது அறியமுடிகிறது. பாலஸ்தீன நாட்டில் சாலோமோன் அரசன் தங்க நாணயங்களை வெளியிட்டு நாட்டை அமைதியுடன் ஆண்டு வந்தான் என்றும் சேபா நாட்டு ராணி அந்நாட்டு ஆட்சியின் பெருமையைக்கண்டு வியப்புற்றாள் என்று வரலாறு கூறுகிறது.

<u>கொங்கு நாட்டில் சீரியர் நாணயங்கள்</u>:

சீரிய கிறிஸ்தவர்களின் ஆட்சி கி.பி. 189 முதல் 894 வரையில் கொங்கு நாட்டில் நடைபெற்று வந்தது. மக்களுக்குத் தொண்டு செய்வதுதான் ஆட்சி என்று அவர்கள் கருதினார்கள். அக்காலத்தில் கன்னட அரசர்களின் ஆதிக்கத்தில் சிற்றரசர்கள் ஆண்டு வந்தனர். சீரிய வியாபாரிகள் படியூரிலிருந்து இரத்தினக் கற்களை ரோம தங்க நாணயங்களைக் கொடுத்து பெற்றுச் சென்றனர். அவர்கள் காலத்தில் 700 ஆண்டுகள் இந்நாடு அமைதியாக இருந்தது. அவர்களுக்குப் படையில்லை. கன்னட அரசரிடமிருந்து விடுதலை பெறவேண்டுமென்ற விருப்பமுமில்லை. நீதி இருந்தது. விவசாயம், வியாபாரம், கைத்தொழில் விருத்தி அடைந்தது. இராஷ்டிரகூடரின் ஆளுகையில் இந்த இரு நாடுகளும் சில காலம் இருந்து வந்தன. இராஷ்டிரகூட அரசர்கள் தலைமையில் கொங்கு நாடு உன்னத நிலையில் இருந்தது. நாட்டு மக்கள் மன்னரைப் புகழ்ந்து அந்த அரசுக்கு "சூரியகுல அரசு" என்று பட்டம் சூட்டினர்.

<u>சோழர் ஆட்சி</u>: சீரியர் ஆட்சிக்குப் பிறகு கொங்கு நாடு சோழர் ஆட்சிக்கு வந்தது. நாடெங்கும் சைவக் கோயில்கள் கட்டப்பட்டு கோயில்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. பழஞ்சலாகை, அச்சு ஆகிய காசுகள் தீபத்திற்காக தினமும் வழங்கப்பட்டதாக கல்வெட்டுக்கள் வாயிலாக வரலாறு கூறுகிறது.

<u>முடிவுரை</u> :- நாணயம் என்ற பதம் ஒருவருடைய குண நலனையும் குறிக்கும். ஒரு நாட்டில் தங்க நாணய செலாவணியில் இருந்தால் அவர்கள் நாட்டு மக்களின் தொண்டர்களாகவும் பெருந்தன்மையாளர்களாகவும் இருப்பார்கள். பொன் உயர்வான உலோகம். அதுபோல் தங்கக்காசு வெளியிட்ட அரசனும் உயர்குண முடை[illegible] "நாணயம்" என்பது இருபொருள் கொண்டுள்ளது.

பல்லவர் காசுகள்.

பேராசிரியர் க. ஆ. திருஞானசம்பந்தம், ஈரோடு 4.

கல்வி கரையிலாக் காஞ்சி மாநகரைத் தலைநகரமாக கி. பி. 6 ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 9ம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் காவிரியாறு வரை உள்ளிட்ட பகுதியை ஆண்டவர்கள் பல்லவர்கள்.

பல்லவர்கள் காசுகள் பற்றி நாணயவியலார் (Numismatists) குறிப்பன.:-

பல்லவர்களின் இலச்சினை (முத்திரை) (1) சிம்மமும், ரிஷபமும் (2) ஆம் எனப் பட்டயங்களிலும் கல் வெட்டுக்களிலும் குறிக்கப் பெற்றுள்ளன. (2) வேலூர்ப்பாளையச் செப்பேடு, உதயேந்திரமும் செப்பேடு (1) உருவப் பள்ளி, பிகாரப்பட்டயங்களில் சிங்க இலச்சினை) காசியல் ஆய்வாளர்கள் பொன், வெள்ளி, செம்பு, ஈயம் ஆகிய உலோகங்களில் பல்லவர்கள் காசுகள் கிடைத்துள்ளன என குறிப்பிடுவர் (டாக்டர் மீனாட்சி, டாக்டர் ஹரல்ட்சு, திரு. எலியட், திரு. இராமையா, திரு. இராப்சன், திரு. தேசிகாச்சாரி, டாக்டர் நாகசாமி, செல்வி ஆர். வனஜா) காசுகள் அனைத்தும் வட்ட வடிவமானவை, அச்சடிக்கப்பட்ட (die-struck) காசுகளாகும். காசுகளின் முன்புறம் (obverse) ரிஷபமும், பின்புறம் (reverse) ஸ்வஸ்திக் சக்கரம், வில், மீன், குடை, சங்கு, நண்டு, ஆமை, கலசம், விளக்கு, கப்பல் முதலிய சின்னங்கள் பொறிக்கப் பட்டுள்ளன என்னும் காசியலார் (Numismatists) குறிப்பிடுவர்.

காசுகளில் காணும் பெயர்கள்:-

ஸ்ரீபதி, ஸ்ரீபரன், மானபர, ஸ்ரீஸ்ரீ, ஸ்ரீராஜ, விபு, லக்ஷித, சுதாசித்ரா போன்ற பெயர்கள் பல்லவகிரந்த எழுத்தில் முகப்பில் ரிஷப சின்னத்தின் மேல் பொறிக்கப்பட்டுள்ளன என்றும் காசியலார் குறிப்பிடுவர். இவ்வாறு பெயரிடப்பட்டுள்ள காசுகள் எம்மன்னரைக் குறிக்கும் என்பது ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

இலக்கியச் சான்றுகள்:-

காணம் மஞ்சாடி, கழஞ்சு, பொன், காசு, விடேல் வடுகு துளைப் பொன் போன்ற சொற்கள் பல்லவர்கள் கல்வெட்டுக்களிலும், சுந்தரர் தேவாரத்திலும் பெரிய புராணத்திலும் காணப்படுகின்றன.

பல்லவர் காசுகள்:

நாணயவியலார் (காசியலார்) கூறிய காசியல் செய்திகளை ஆராயுமிடத்துக் கட்டுரையாளர் ஆய்வுப் பயணத்தை மேற்கொண்ட போது திரட்டிய தகவல் தொகுப்பைத் துணையாகக் கொண்டு இக்கட்டுரை தரப் பட்டுள்ளது.

காசுகளின் உலோகம்:-

ஈயக்காசு, வெள்ளிக் காசு, செம்புக் காசு கிடைக்கின்றன. அவை வட்ட வடிவமாக அச்சடிக்கப்பட்டுள்ளன. பொற்காசு கிடைக்கப் பெறவில்லை. மகேந்திரவர்மன் பொற்காசுகள் ஆறு சென்னை அருங்காட்சியகத்தில் இருப்பதாக டாக்டர் மீனாட்சி குறிப்பிடுவர். (டாக்டர் மீனாட்சி Administration & Social Life under Pallavas, P. 89)

காசுகளின் முகப்புப் பக்கம் (OBVERSE)

அனைத்துக் காசுகளின் முகப்பிலும், பல்லவர் முத்திரையில் காணும் காளையின் உருவம், நின்ற கோலத்தில், காசின் வலப்பக்கமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. காசுகளில் காணும் காளையின் தோற்றம் நான்கு வகையாக அமைகின்றன.

(1) காளை உருவம், புராணக் காசுகளில் காணப்பெறுவது போல், லேசாக அழுந்திய நிலையில்.

(2) காளை உருவம் வரை கோடுகளால் தீட்டப்பட்ட நிலையில்

(3) பல்லவர் இலாஞ்சனையில் அமைந்துள்ள காளை, நின்ற தோற்றத்தில் இருப்பது போல்.

(4) புடைப்புத் தோற்றத்துடன் நின்ற நிலையில் காணப்பெறும் காளை மேற்கூறப்பெற்ற இப்பல்லவர்கள் காசுகள் சிலவற்றில் நந்தி உருவத்தின் மேல் பல்லவ கிரந்த எழுத்துக்களும், சிலவற்றில் விளக்கு, ஸ்ரீவத்சம் அல்லது சங்கு, சந்திரன் பொறிக்சப்பட்டுள்ளன.

காசுகளின் மறுபக்கம் (REVERSE)

காசுகளின் மறுபுறத்தில் அமைந்துள்ள குறியீடுகளைக் கொண்டு (symbols) பல்லவர் காசுகளைப் பலவகைப்படுத்தலாம். (Type) காசுகளின் பின்புறம் காணப்படும் குறியீடுகள்:-

(1) சுவஸ்திகா (2) இரட்டைமீன் (3) ஸ்ரீவத்ஸம் (4) புலிச்சின்னம் (5) சங்கு (சிறியது, நடுத்தரமானது, பெரியது மூன்று வகைக் காசுகள்) (6) தாமரை (7) கதிரவன் (8) ஆணைச் சக்கரம் (9) போதிமரம் (10) ஒற்றைக்குடை (11) முக்குடை (12) கும்பம் (13) சித்திர எழுத்துக்கள் (14) தோணி (கப்பல்) கட்டுரையாளருக்கு கிடைத்த காசுகளில் காணும் குறியீடுகளை வகைப்படுத்தித் தரப்பட்டுள்ளன.

காசுகளின் நிறைகள்:- (WEIGHT)

வெள்ளியிலும், செம்பினாலும் ஆன காசுகள் அனைத்தும் வட்ட வடிவமானவை. காசுகளின் நிறையை ஒட்டியும், குறுக்களவைப் பொறுத்தும், எண் வகையாகக் காசுகளைத் தரம் பிரிக்கலாம். காசுகளின் குறுக்களவு:

(1) 7. செ.மீ (2) 1 செ.மீ. (3) 1,2 செ.மீ.
(4) 1.5. செ.மீ. (5) 2 செ.மீ.

காசுகளின் நிறை:- (1) 400 மி. கிராம். (2) 700 மி.கி. (3) 1 கிராம். (4) 1.5 கிராம். (5) 2.5 கிராம். (6) 3 கிராம் (7) 4.00 கிராம். (8) 8.00 கிராம். எனவே பல்லவர் காலத்தில் எண் வகை நிறையுள்ள பொன், வெள்ளி, செம்பு, ஈயக்காசுகள் மக்கள் மத்தியில் செலாவணி ஆகி இருக்கலாம்.

சாதவாகன மன்னர்களில் ஸ்ரீபுலுமாயி வெளியிட்ட காசுகளைப் போல் எண்வகை மதிப்புள்ள காசுகளைப் பல்லவ மன்னர்கள் வெளியிட்டு இருக்கலாம். பல்லவர்களின் பொற்காசும், ஈயக் காசும் தற்போது கிடைப்பது குதிரைக் கொம்பாக உள்ளது. ஒருவேளை தக்க அகழ்வு ஆராய்ச்சி மேற்கொண்டால் கிடைக்கக்கூடும்!

காசுகளில் காணும் எழுத்துக்கள்:-

பல்லவ கிரந்த எழுத்தில் அமைந்துள்ள பல்லவ மன்னர்களின் பட்டப் பெயர்கள் பற்றி கட்டுரை முகப்பில் முன்பே கண்டோம். ஸ்ரீபர, ஸ்ரீநிதி எனப் பொறிக்கப் பெற்ற காசுகள் இராச சிம்ம பல்லவனையும்,

'மாபைர' என்னும் பொறிப்பு தெள்ளாறு எறிந்த நந்தி வர்மனையும், 'விபு' 'லக்ஷித', 'சுதாசித்ரா' என்னும் பொறிப்புக்கள் முதலாம் மகேந்திரவர்மனையும் குறிப்பதாகக் காசியலார் குறிப்பிடுவர். கிரந்த எழுத்துக்கள் ஒரு சில காசுகளின் முகப்பில் ரிஷபச் சின்னத்திற்கு மேல் பொறிக்கப்பட்டுள்ளன. ஓரிரு காசுகளின் பின்புறம் பூப்போன்ற எழுத்துக்களில் பொறிப்புகள் காணப்படுகின்றன. ஒருவேளை இக்காசு கைலாசநாதர் கோயிலை எழுப்பிய இராசசிம்மனின் காசாக இருக்கலாம் !. (ஆய்வுக்குரியது) வட்ட வடிவமாக அமைந்துள்ள ஒரு கலப்பினக்காசின் முகப்பில் 'ஸ்ரீபரமேசுர' எனக் கிரந்த எழுத்தில் உள்ள காசு முதலாம் பரமேஸ்வரன் வெளியிட்ட காசாக இருக்கலாம். காசின் எழுத்தமைதி கொண்டு இக்காசு கி.பி. ஏழாம் நூற்றாண்டினதாக இருக்கலாம் எனக் கூறலாம். போதிமரம், ஸ்வஸ்திகம், சங்கு, நந்திப் பொறிப்புக்கள் பல்லவ மன்னர்கள் தாம் தழுவிய 'சமயச் சின்னங்களை பொறித்து காசுகளை உலாவிட்டிருக்கலாம். பௌத்த சமயத்தைக் காட்ட போதிமரத்தையும், ஜைன சமயத்தைக் காட்ட ஸ்வஸ்திகாவையும், சைவ சமயத்தைக் காட்ட ரிஷபத்தையும், வைணவ சமயத்தைக் காட்ட சங்குச் சின்னத்தையும் காசுகளில் முறையே பொறித்த பல்லவ மன்னர்கள் தம் சமயப்பற்றைக் காட்டியிருக்கலாம். சில காசுகளில் உள்ள தோணி/கப்பல் சின்னம் பல்லவரின் கடல் படையினையும், வணிக வளத்தையும் சுட்டப் பொறிக்கப்பட்டிருக்கலாம். காசுகளின் பின்புறம் உள்ள மீன் சின்னமும், புலிச் சின்னமும் முறையே பாண்டியரையும், சோழர்களையும் வெற்றி பெற்றதற்கு அறிகுறியாகப் பல்லவர் வெளியிட்ட வெற்றிக் காசுகளாக அமையலாம். பல்லவர் காசுகள் சிலவற்றில் ரிஷபச் சின்னத்தின் மேல் கீழ்க்காணும் பொறிப்புக்கள் காணப்படுகின்றன.



கட்டுரை எழுதத் துணையான நூற்கள்:

1. கட்டுரையாளரின் காசுகளின் தொகுப்பு.
2. Tamil coins- A study ஆர். நாகசாமி
3. Administration & social Life under Pallavas Dr.Meenakshi.
4. Coin Age of South India - வித்திய பிரகாசு
5. Indian Coinage - R. Vanaja
6. South Indian coinage. - T. தேசிகாச்சாரி
7. பல்லவர் வரலாறு டாக்டர் மா. இராசமாணிக்கம்
8. "பல்லவர் காசுகள்". - தினமலர் ஆசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி தனி வெளியீடு.

நாணயங்களைப் பாதுகாத்தல்

வே. ஜெயராஜ்,

காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், ஈரோடு 1.

உலகின் பல பகுதிகளிலும் தங்கம், வெள்ளி, செம்பு, ஈயம், துத்தநாகம், இரும்பு [illegible] ஆகிய உலோகங்களிலும் எலக்ட்ரம், பித்தளை, வெங்கலம் போன்ற உலோகக் கலவைகளிலும் பல வடிவங்களிலும் அளவுகளிலும் நாணயங்கள் வெளியிடப்பட்டன. கால ஓட்டத்தில் நாணயங்களில் பெரும்பாலானவை பூமியில் புதையுண்டு போயின. அவை பானைகளிலும், சட்டிகளிலும், கோயில்களிலும், பூமியை அகழும்போதோ, விவசாயத்தின் போதோ அல்லது அகழ்வாய்வின்போதோ இக்காலத்தில் கிடைக்கின்றன.

நாணயங்களின் நிலை:-

பூமியிலிருந்து கிடைக்கும் நாணயங்கள் பூமியிலுள்ள உப்புக்களினால் மாற்றமடைந்து ஒன்றுடன் ஒன்று சேர்ந்து மண்ணோடு கட்டியாகக் காணப்படுகின்றன. தங்கம், வெள்ளி நாணயங்கள் செம்பு பாத்திரத்தில் கிடைத்தால் செம்பு அரிப்புப் பொருட்களால் மூடப்படுவதால் செம்பு நாணயங்கள் போலக் காணப்படும். ஆய்வு செய்தால்தான் உண்மை நிலை தெரியவரும். தங்கம், வெள்ளி, செம்பு நாணயங்கள் ஓரளவு காலத்தால் விரைவில் அழியாதவை. ஈயம், இரும்பு, துத்தநாகம் போன்றவை விரைவில் அழிந்து விடுகின்றன.

நாணயங்களின் பாதிப்பு:

பூமியில் புதையுண்ட நாணயங்கள் குளோரைடுகள், சல்பேட்டுக்கள், கார்பனேட்டுக்கள், போன்ற உப்புக்களுடனும் பூமியிலுள்ள நீருடனும் வினைபுரிவதால் நாணயங்கள் அரிக்கப்பட்டு அதனதன் உலோக உப்புக்கள் நாணயங்கள் மேல் படர்ந்து விடுகின்றன. பூமியினுள்ளே சில சூழ்நிலைகளில் பாதிக்கப்படாமலும் சில பாதிக்கப்பட்டும் சில தாதுக்களாக மாறியும் காணப்படுகின்றன. சில நுண் கிருமிகளும் நாணயத்தைப் பாதிக்கின்றன. பூமியின் மேற்பரப்பில் காணப்படும் நாணயங்களும் கவனிக்கப்படாவிடில் அழிந்துவிடுகின்றன. காற்று மண்டலத்தில் ஆக்ஸிஜன், கார்பன்டை ஆக்ஸைடு, சல்பர்டை ஆக்ஸைடு, ஹைடிரஜன் சல்பைடு, சோடியம் குளோரைடு போன்ற வாயுக்களும் தூசுகளும் நிரம்பி இருக்கின்றன. [illegible] நீரில் கரைந்து உலோக நாணயங்களை அரிக்கின்றன.

பாதுகாப்பு முறைகள்:-

நாணயங்களைப் பொதுவாக கர்சியலார் தேங்காய் எண்ணெயில் ஊறவைத்தும், புளிக்கரைசலில் ஊறவைத்தும் வெள்ளைத் துணியால் சுத்தம் செய்தும் பாதுகாக்கிறார்கள். அருங்காட்சியகங்களில் விஞ்ஞான அடிப்படையில் பல வழிகளில் பாதுகாக்கப்படுகின்றன. அவை;

i) இயற்பியல் முறை.

ii) வேதியியல் முறை.

iii) மின்கரைசல் குறைப்பான் முறை ஆகும்

இயற்பியல் முறை:-

ஊசி, சிறிய கத்தி, போன்ற சிறிய கருவிகளைக் கொண்டு கவனமாக நாணயங்கள் மேலிருக்கும் மண்; அழுக்குகளை வேதியியல் பொருட்களின் உதவியின்றி கவனமாக நீக்குதல் இயற்பியல் முறையாகும்.

வேதியியல் முறை:

வேதியியல் பொருட்களின் உதவியால் சுத்தம் செய்யும் முறை வேதியியல் முறையாகும்.

தங்கம்: தங்கம் பாதிக்கப்படாதது. நாணயங்களின் மேல் படிந்துள்ளவற்றை 1% நீர்த்த ஸிட்ரிக் அமிலத்தில் வைத்து சுத்தம் செய்யலாம்.

வெள்ளி: கருப்பு நிறமாக மாறிக் காணப்படுகின்றன. 5 மி.லி. பார்மிக் அமிலம் 95 மி.லி. நீரும் சேர்ந்த கலவையிலும் அமோனியா திரவத்திலும் மாற்றி மாற்றி வைத்து சுத்தம் செய்தால் கருமை நிறம் நீங்கும்.

ஈயம்: ஈய நாணயங்களில் வெள்ளைப் பொடிகள் உருவாகி அவை அழிகின்றன. 2% அசிட்டிக் அமிலத்தில் சில நிமிடங்கள் வைத்திருந்து சுத்தம் செய்தால் உப்புகள் நீங்குகின்றன. அல்லது ஆம்பர்லைட் ஐ.ஆர். 120 என்ற ரெசின் நீர் கலவையில் வைத்து சற்று சூடாக்கினால் ஈய நாணயங்கள் துரிதமாகவும், சேதமின்றியும் சுத்தமாகின்றன.

செம்பு:

செம்பு; பித்தளை, வெங்கலம், நிக்கல் ஆகிய நாணயங்களைச் சுத்தம் செய்ய காரத்தன்மையுடைய சோடியம் பொட்டாசியம் டார்ட்ரேட் கரைசலில் (5 பகுதி சோடியம் ஹைடிராக்ஸைடு, 15 பகுதி சோடியம் பொட்டாசியம் டார்ட்ரேட் 80 பகுதி நீர்) வைத்திருந்த பின் 5% அசிட்டிக் அமிலத்தில் வைத்து சுத்தம் செய்தால் மேல் படிந்த அரிப்புப் பொருட்கள் நீங்குகின்றன.

மின் கரைசல்குறைப்பான் முறை: அரிப்புப் பொருட்கள் நிறைந்தும் சற்று உறுதியுமான நாணயங்களை 5% சோடியம் கார்பனேட்டுக் கரைசலில் நேர் மின்வாயோடு இணைத்தும் துருவேறா இரும்புக்கம்பியினை எதிர் மின்வாயோடு இணைத்தும், 6-12 வோல்ட் நேரடி மின்சக்தியைப் பாய்ச்சினால் சில நிமிடங்களில் அரிப்புப் பொருட்கள் நீங்குகின்றன.

கழுவுதல்:

மேற்கூறிய முறைகளில் சுத்தம் செய்யப்பட்டவை அனைத்தும் புருசினால் தேய்த்து கழுவுதல் வேண்டும். பின் சூடான காய்ச்சிய வடித்த (Distilled water) நீரில் சுத்தம் செய்து உடனே உலர்த்துதல் வேண்டும்.

பாதுகாப்பு முறைகள்:

1) நாணயங்கள் மீது 2% பாலிவினைல் அசிட்டேட் என்ற ரெசின் (1:1 அசிட்டோன், டொலுயினில் கரைத்து) பூசினால் மேலும் பாதிக்கப்படாமல் இருக்கும்.

2) நாணயங்கள் ஒன்றோடொன்று உராயாமல் இருக்க வேண்டும்.

3) நாணயங்களைக் காற்று புகா பாலித்தீன், அக்ரலிக் போன்ற கூடுகளில் போட்டு பாதுகாக்கலாம்.

4) அதிக அளவில் கெட்டுப் போயிருக்குமெனில் வேதிய பாதுகாப்பு நிபுணரை அணுகுதல் நலம்.

A RARE PERUVAZLUTHI COPPER COIN

Prof: K.A. Thirugnanasambandam, M.A.M.Phil.
Chikkaiah Naicker College, Erode 4.

From time immemorial Pandya Kings were ruling the Tamil country. They encouraged the growth not only of Tamil language and literature but also of trade and commerce before the dawn of the Christian Era.

Barter system prevailed in the inland trade but foreign trade was carried out, especially with Rome, through coins.

Pandya Coins:

Pandya kings issued coins by striking them in mint-which was called as Akhasalai and circulated them for the public use. Pandya coins were cast and die-struck. The Sangam Age Pandya Copper coins have been found in rectangular and square shapes in Vaigai river bed. They are found in three different sizes-big, small and medium. The pandyas issued coins with a weight varying from 14 to 72 Kunrimani ("Rati" seed)

Different types of coins:

The following types of the Pandya coins have been indentified so far by studying figures in the obverse. They are the Elephant type with Astamangala symbols, the Elephant type with four symbols, the Bull type, the horse type and the Bodhi tree type coins. In the reverse, the Pandya dynastic fish emblem is seen. Most of the coins are made of copper.

Coins with Legends:

A rare square copper coin belonging to the Sangam Age was found by the author in the river bed, at Madurai recently, A standing figure wearing a cap is found in the centre. A running legend in Tamil Language in Brahmi script runs as 'Peruvazhuthi' 

Description of the coin: obverse

This is a square copper coin with the king Peruvazhuthi in the standing posture in the middle. The first letter of the name Peruvazhuthi  starts from the right side and the letters proceeds clock-wise, downward one by one, the last letter  ending in the left side of the coin.

Rev rse:

On the reverse, a standing lion is seen facing the right instead of the conventional Pandya's fish emblem. The lion emblem clearly signifies that the Pandya king Peruvazhuthi was the "king of Kings".

King Peruvazhuthi coin

Eye copy

OBVERSE

REVERSE

Metal	:	Copper
Shape	:	Square
Size	:	1.8 c.m. x 1.8 c.m.
Weight	:	5.400 grams.
Age	:	2nd Century B.C.

MADAI: THE LEGAL TENDER COINS OF THE CHOLAS.

C. Selvaraj, Madras-5.

It is an established fact that the cholas founded a vast empire and established a stable and efficient administration in the Tamil country. They had sound financial system backed by good taxation and currency systems. The Chola rulers issued many type of coins in various denominations out of metals like gold, copper, silver etc. Further as they ruled Ceylon as one of their Mandalams for sometime during the reign of Rājarāja I, the coins issued by them in Ceylon like Ilakkasu, Ilakkarunkasu etc. were also found in Tamil country. Nevertheless as there existed flourishing inter-national trade with numerous countries of the West, foreign coins like Tulaipon, Roman gold coins etc., were also in circulation in the Tamil country. So as a result of the circulation of various types of coins with invariable denominations and values there seems to have arisen lot of confusions in transactions. Therefore, the chola rulers probably from Parantaka-I with the intention to regulate this money circulation, began to issue a new type of coins called Mādai with full legal tender. This fact assumes significance that almost all the powerful rulers of this dynasty issued this Mādai type of coins. Nevertheless whenever a king issue such coins, being it was the legal tender coin they included either their name or title also along with the name of the coin such as Rajarajan Mādai, Rajendra Mādai, Madurantakan Mādai [1] etc. It is significant to note here that the Cholas though they issued many type of coins, the Madai type of coins alone had the privilege of having the name or title of the ruler associated with it. The Chola rulers used these Madai type of coins as their full legal tender coins. Another special feature of these coins was that it was alone used as a standard finess for testing the gold.[2]

OTHER SPECIAL FEATURES:

The Mādai type of coins also had some other special features than all the other coins. Unlike other coins, these coins had the peculiar feature of having the royal emblem, the tiger and the legend near to it. On the reverse side also it had the similar features. But all the other coins have the feature of having depicted the emblem of tiger on the one side and the legend only on the reverse side. A peculiar coin of this type has been reported by Mysore Archaeological Report in the year 1934.[3] This coin bears on the left a fish and a seated tiger on the right. A legend is also found around the emblem. The legend reads "Chain (M) tra chā nta" i.e. Chandrasanta which is either a new name or a title. The '8' like figure which has been read as 'M' is Grantha. With some doubt the legend may also read as Cha n (8) ta Cholan. Rajaraja I had the title Chanda, Parakrama, the first word of which may possibly the same as the first word of the legend. But the device of tiger and the fish and the Tamil legend may indicate a different person as also the '8' like figure. The meaning of the later is in this case doubtful. It may be a modification of the Telugu Figure 4".

But Dr.R. Nagaswamy[4] feels that the above interpretation given to this coin is wrong. He reads the legend as 8 as the Grantha letter Ma and the Characters as Ma-ti-ra-n-ta-ka-n. Since the city of Madurai was refered in Ancient records as Matirai, he feels that it was issued by a Chola Victor of Madurai. Now arise the question who was the victor of Madurai? It is to be noted here that Madurai, the capital of the Pandyas was the target of attack by the Cholas of Thanjavur throughout their rule. In fact the Chola rulers like Parantaka I, Uttamachola,I, Rajaraja I, Kulottunga I etc., led successful expeditions upon that country and assumed victorious titles like Maduraikondan. Hence the question arise to whom the coin should be attributed? Again Dr. R.Nagaswamy by taking into consideration of the Grantha and Tamil Characters found in the coin feels that it belonged to Uttamachola who also waged successful wars with the Pandyas of Madurai and he assumed the title of Maduraikonda Parakesari. A same type of coin which was found by Elliot contain the name of Uttamachola.[5]. As both the coins have same type of signs this Mādai Coin with tiger legend can be attributed to Uttamachola.

Thus the Mādai type coins played a vital role during the period of Cholas. It has wide circulation and it retained its value throughout their rule.

NOTES AND REFERENCES:

1. K.A. Nilakanta Sastri, The Cholas, University of Madras P.613.

2. 140 of 1912; A.R.E., 1913 II, 22

3. M.A.R., 1934, plate XVIII Fig. 4.

4. Dr. R.Nagaswamy, (ed), Damilica, State Department of Archaeology, Madras, 1970, P.101.

5. Dr.R.Nagaswamy, Readings of Elliot coins, Madras 1970, P.43.

***